மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்தணி சட்டமன்றத் தொகுதி, ஆர்.கே. பேட்டை ஒன்றியத்திற்கு உட்பட்ட பகுதிகளில் அரசுப் புறம்போக்கு நிலங்கள் அதிகமாக இருக்கும்பட்சத்தில், மாவட்ட ஆட்சித் தலைவருடைய ஒப்புதல் பெற்று, மேலும் போதுமான நிதியாதாரங்களுடன் தொழில் திட்டங்களுக்குண்டான திட்ட அறிக்கையுடன் ஆர்வமுள்ள 20 தொழில் முனைவோர்கள் முன்வந்தால், தொழில் முனைவோர் தேவை ஆகியவற்றின் அடிப்படையில் மாவட்ட ஆட்சியர், பொது மேலாளர், மாவட்டத் தொழில் மையம் ஆகியோருடன் கலந்தாலோசித்து, புதிய தொழிற்பேட்டை அமைப்பதற்கு அரசு தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின்மூலமாக தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினருக்குத் தெரிவித்து அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 136, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

136—

கால்நடை கிளை நிலையம்

***4121—முனைவர் கோவி. செழியன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவிடைமருதூர் தொகுதி, அம்மல்குடி ஊராட்சியில் கால்நடை கிளை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

திருவிடைமருதூர் தொகுதி, அம்மல்குடி ஊராட்சியில் கால்நடை கிளை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா என்று மாண்புமிகு உறுப்பினர் கேட்டிருக்கிறார். அந்த அம்மல்குடி ஊராட்சியிலே 3,000 கால்நடைகளுக்கும் குறைவான

கால்நடைகளே இருப்பதால் அங்கே கால்நடை கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன், இருக்கையில் இல்லை.*

வினா வரிசை எண் 137, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. வைரமுத்து, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

137—

பேருந்து பணிமனை

5482*—திரு. பி.கே. வைரமுத்து:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருமயம் தொகுதி, திருமயத்தில் பேருந்து பணிமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி, கந்தர்வக்கோட்டை, இலுப்பூர் ஆகிய 3 பணிமனைகளுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் உத்தரவுப்படி 9-12-2011 அன்று நிருவாக ஒப்புதல்கள் வழங்கப்பட்டுள்ளன. கந்தர்வக்கோட்டை, இலுப்பூர் ஆகிய பணிமனைகளுக்குத் தேவையான இடத்தைத் தேர்வு செய்ய நேரில் சென்று ஆய்வுகள் செய்யப்பட்டுள்ளன. மேலும், திருமயம் தொகுதி, திருமயத்தில் புதிய பணிமனை அமைக்க உரிய இடம் கிடைக்கப்பெற்ற பின்பு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் உத்தரவு பெற்று நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. வைரமுத்து அவர்கள்.*

திரு. பி.கே. வைரமுத்து: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடைமடை திறந்த வெள்ளம், கடைக்கோடி மக்களையெல்லாம் அடைந்தது போன்ற மகிழ்ச்சி தந்தது அம்மா அவர்களின் ஆட்சி. மட்டற்ற நலப் பணிகள் மக்களை*